**வவுனியா மாநகர சபை - 2024**

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வவுனியா மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வவுனியா மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 16,731,474 ஆன 18 வேலைத்திட்டங்களானது நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் மதிப்பீடுகள், உடன்படிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் அடிப்படையில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன்கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நடப்பு பொறுப்புக்கள் அதிகரித்து காட்டப்பட்டுள்ளதுடன் வருமான மிகையும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சில்லறை கடன் கொடுநர் கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகையில் இருந்து மார்ச் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா. 16,378,952.84 கொடுப்பனவு செலுத்தப்பட்டது. இதன் பின்னரான சில்லறை கடன் கொடுநர் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 352,520 ஆனது 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக்கணக்கின் ஊடாக திரண்ட நிதிக்கு மாற்றம் செய்யப்படவுள்ளது. | உண்மை பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான 13 சிறு வீதிகளின் திருத்தச் செலவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,493,099 வீதிகளாக கணக்கீடு செய்யப்பட்டமையால் சொத்துக்களின் பெறுமதி இத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 13 வீதிகளின் கிரவலிடல் செலவு மற்றும் புனரமைப்பு செலவு ரூபா 2,493,099 மூலதன செலவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | பராமரிப்பு வேலைகள் உரிய ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் முத்திரைத் தீர்வை மூலம் பெறப்பட்ட ரூபா. 2,439,255 ஆனது வருமானச் செலவுக் கணக்கில் மூலதன நன்கொடைகளாக இனங்காணப்பட்டிருந்தது. | தவறுதலாக மூலதன வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | சரியான வகுதிக்குள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான கணக்காய்வுக் கட்டணம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளுக்கு கொண்டுவரப்படாமையால் வருமான மிகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கடந்த காலங்களுக்கான கணக்காய்வு கட்டணங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் கொடுப்பனவினை மேற்கொள்ளும் பொருட்டு 2026 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டின் ஊடாக ரூபா 4 மில்லியன் நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | உரிய ஏற்பாடுகள் உரிய காலத்திற்கு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்வுக்கு எழுத்து மூல சான்றுகள் இண்மை.

| | | | |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள 26 காணிகளுக்கான காணி உரிமைப் பத்திரச் சான்றுகள் மற்றும் வரலாற்றுத் தாள்கள் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 16.17 Hec விஸ்தீரணமுடைய 26 காணிகளுக்குரிய பாரதீனப்படுத்தல் கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்கான தொடர் நடவடிக்கை மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய சான்றாதாரங்கள் பேணப்பட்டு வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024 டிசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் பொறுப்புக்கள் மீதி ரூபா 2,235,521,560 இனை செவ்வை பார்க்க பிரதான பதிவேடு மற்றும் பொது நாட் குறிப்பு பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பெரும்பாலான செயற்பாடுகள் கணணிமயப்படுத்தப்பட்டுள்ளமை யினால், பிரதான பதிவேட்டிலுள்ள விடயங்கள் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான பதிவுகள் அனைத்தும் பிரதான பதிவேடுகள் மற்றும் நாட்குறிப்பு பதிவேடுகளில் பேணுவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது | கணக்காய்விற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | 02 விடயங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களின் மீதிக்கும் உரிமை அசைவுக் கூற்றின் மீதிக்கும் இடையே ரூபா 50 மில்லியன் வேறுபாடு ஒன்று காணப்பட்டுள்ளதுடன் வேறுபாடு விளக்கப்பட்டிருக்கவில்லை. | ஐந்தொகைக்கான குறிப்பில் தவறுதலாக நிதி ஒதுக்கத்தில் கூடுதலாகவும் அபிவிருத்தி ஒதுக்கத்தில் குறைவாகவும் ரூபா 25 மில்லியன் காட்டப்பட்டுள்ளது. | சரியான தொகைகள் சரியான இடத்தில் பிரதிபலிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கணிப்பிடப்பட்ட செலவிலும் கூடிய வருமானம் ரூபா 6,470,175 ஆயினும் திரண்டநிதிக்கு செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 8,405,963 மாற்றப்பட்டிருந்தமையினால் திரண்டநிதி ரூபா 1,935,788 இனால் அதிகரித்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்குரிய திரண்ட நிதி மீதியானது கணக்குகளில் உரிய முறையில் சீராக்கம் செய்யப்பட்டு 31.12.2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய சரியான மீதியே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | சரியான தொகை உரிய இணக்கப்படுத்தலுடன் மாற்றப்படல் வேண்டும். |

## 1.6 இணங்காமைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், (அத்தியாயம் 252) | | | | |
| (i) 155 பிரிவு | - | சபைக்குச் சொந்தமான 81 கடையறைகளுக்கு அறவிடப்படும் வாடகைக் கட்டணம் மற்றும் 95 நிலங்களுக்கு அறவிடப்படும் குத்தகைக் கட்டணம் காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டு திணைக்களத்திடம் இருந்து விலை மதிப்பீட்டு பெறுமதி கிடைக்கப்பெறாத நிலையில், மீளவும் 2025.09.12 ஆம் திகதிய கடிதமானது மீளவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சட்டத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (ii) 252 பிரிவு | 32,707,191 | ஆதனவரியினை செலுத்தாத ஆதன உரிமையாளர்களுக்கெதிராக எழுத்திலான அறிவித்தலொன்றினை விடுத்து அறவிட வேண்டிய பணத்தை அறவிட அல்லது ஆதனத்தை தடை செய்து கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 31.12.2024ற்கான இறுதி கணக்குகளில் காட்டப்பட்டவாறான நிலுவைகள் ரூபா 32,707,191ல் 30.11.2025 ல் உள்ளவாறாக இதுவரை ரூபா. 8,244,934 நிலுவைகள் அறவீடு செய்யப்பட்டுள்ளது. . | -மேற்படி- |
| (ஆ) 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடு | - | ஆதனவரி அறவிடுவதற்காக மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தும் 2009 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட 15,340 எண்ணிக்கையிலான மொத்த ஆதனவரி அலகுகளினை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து புதிய விலை மதிப்பீட்டு ஆதனங்களின் புதிய பெறுமதியின் அடிப்படையில் ஆதன வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விதிகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 26/92 | - | மாநகர சபைக்குச் சொந்தமான வாகனங்களில் மாநகர சபையின் சின்னத்தை காட்சிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது 10 வாகனங்களில் மாநகர சபையின் சின்னம் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |
| (உ) | திறைசேரி செயலாளரின் 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01/2018 இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 02(அ) | - | 05 தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலாக பயன்பாட்டில் இல்லாத சாலைக்கு தகுதியற்ற 10 வாகனங்களை அப்புறப்படுத்த மாநகர சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தற்போது மீளவும் ஏலம் கோரும் பொருட்டு மற்றும் உதரிப்பாகங்களாக விற்பனை செய்வதற்குரிய விலை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவீனங்களை மிகைத்த வருமானம் ரூபா 82,584,388 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இறுதி 09 மாதங்களுக்கான மீண்டுவரும் செலவீனங்களை மிகைத்த வருமானம் 59,851,921 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வ காலப்பகுதிக்கான தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம** | **பட்டியலிடப்பட்ட வருமானம** | **சேகரிக்கப் பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 23,762,042 | 23,915,922 | 25,291,496 | 32,707,191 | - | 14,343,642 | 14,343,642 | 34,082,765 |
| வாடகை | 46,470,285 | 57,970,236 | 53,896,114 | 9,248,506 | - | 35,747,063 | 35,977,491 | 5,174,384 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,030,000 | 3,327,473 | 3,327,473 | - | - | 1,118,150 | 1,118,150 | - |
| ஏனைய வருமானம் | 79,815,500 | 99,493,830 | 99,236,230 | 778,760 | - | 81,204,237 | 81,204,237 | 521,160 |

### 2.2.2 வருமானங்களை சேரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரிகள்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலுவை வீதவரியாக ரூபா 32,707,191 காணப்பட்டதுடன் அதில் உள்ள ரூபா 22,336,368 வீதவரி நிலுவையானது 02 தொடக்கம் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதியாக காணப்பட்டிருந்தன. | எஞ்சியுள்ள நிலுவைகளை அறவீடு செய்தல் தொடர்பில், சிவப்பு அறிவித்தல்களை வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. | நீண்ட கால நிலுவைகள் அறவீடு செய்யப்படல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகைகள்** | | |
| (i) | வவுனியா மாநகர சபைக்குச் சொந்தமான கடையறைகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் வாடகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,862,119 நிலுவையினை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை நிலுவைகள் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டு அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலங்களுக்கான குத்தகை நிலுவையாக ரூபா 2,157,164 காணப்பட்டதுடன் அதில் உள்ள ரூபா 1,309,097 தொகையானது 02 தொடக்கம் 20 வருடங்களிற்கு இடைப்பட்ட வீச்சில் நிலுவையாக காணப்பட்டிருந்ததுடன் இத்தொகையினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 31.12.2024 ல் காணப்பட்ட குத்தகை நிலுவைகள் ரூபா 1,323,809 ல் ரூபா 31.12.2025 ல் உள்ளவாறாக ரூபா 49,214 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |
| (iii) | குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளில் குத்தகைதாரர்களால் நிரந்தரக் கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்ட போதும் இதுவரைக்கும் கட்டிடங்களுக்குரிய பெறுமதிகள் கருத்தில் கொள்ளப்படாமல் வெறுமனே நிலங்களுக்கான பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு அதனடிப்படையில் குத்தகைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு அறவிடப்படுவதனால் சபைக்கு குத்தகை வருமான இழப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | சபையால் வழங்கப்பட்ட 95 ஆதனங்களில் அனுமதியன்றி அமைக்கப்பட்டுள்ள கட்டுமானங்கள் தொடர்பாக, குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் ஊடாக நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. | முழுமையான வருமானம் பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **அனுமதிப் பத்திரக் கட்டணம்** | | |
| (i) | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(அ) இன் படி மீளாய்வாண்டிற்கான வர்த்தக உரிமங்கள் தொடர்பான முறையான | 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி வர்த்தக | சட்ட்துதடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாது வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இத்தகைய அனுமதிப் பத்திரங்கள் இன்றி செயற்படும் வர்த்தக நிறுவனங்களுக்கெதிராக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(6)4 இன் பிரகாரம் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிமங்களை பெற்றுக்கொள்ளாது செயற்படுவோருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. | |
| (ii) | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 267 இன் படி விளம்பரப்பலகை தொடர்பான உரிமங்களை வழங்குவதற்கு முறையான நடைமுறை பின்பற்றப்படாது மீளாய்வாண்டிற்கான விளம்பரக் கட்டணம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 133 விளம்பரப் பலகைகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு சேகரிக்கப்பட்ட கட்டணம் மதிப்பீட்டினை விட உயர்வாக காணப்பட்டது. | 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி வர்த்தக உரிமங்களை பெற்றுக்கொள்ளாது செயற்படுவோருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா அவர்களின் 1999.10.11 ஆம் திகதியிடப்பட்ட எல்/டி/விஎ/05/1999 இலக்க ஆதன மாற்றம் செய்தல் எனும் தலைப்பிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்படுவதுடன் ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு முறை ஒப்பந்தத்தினை புதுப்பித்து நீடித்துக் கொள்ளபடவேண்டும் ஆயினும் மேற்படி ஒப்பந்தத்திற்கு முரணாக 253 கடைகள் மற்றும் 87 நிலங்களுக்கான ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் தரவுகளை சமர்ப்பித்து தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. | அனுமதி பெற்ற பின்னர் மாற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வைப்பிலுள்ள ரூபா 228,317,910 மீதியினை பொதுப்பயன்பாட்டுச் சேவைகளுக்குரிய அபிவிருத்தித் வேலைகளில் ஈடுபடுத்தாமல் வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் | குறித்த வைப்புக்கள் அனைத்தும் நோக்கம் குறித்து நிலையான வைப்புக்கணக்கில் வைப்பு செய்யப்பட்டுள்ளது. ஆகவே எதிர்வரும் காலங்களில் குறித்த நோக்கம் சார் தேவைப்பாடுகள் எழும் சந்தர்ப்பங்களில் அவசியமான அபிவிருத்தி | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் வைப்பிலிடப்பட்டிருந்தது. | வேலைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | குத்தகைக் காலம் முடிவடைந்திருந்தும் 05 தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலாக குறித்த நான்கு உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்ட 04 விடுதிகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XIX இன் பிரிவு 6.1 இன் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த விடுதிகளில் தற்போது வசிக்கும் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களுக்கு 2025 டிசெம்பர் 31ஆம் திகதி வரை கால அவகாசம் ஒன்றினை வழங்கி குறித்த விடுதிகளை சபைக்கு கையேற்பதென சிபாரிசு செய்யப்பட்டு இடம்பெறவுள்ள சபைக்கூட்டத்திற்கு சமர்ப்பித்து தொடர் நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தாபனக்கோவை விதியுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் சபையினால் ஆதன வரி அறவிடப்படும் 11,484 ஆதனங்களில் 1,276 ஆதனங்களுக்கு சபையினால் K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய வசிப்பவர்களின் பெயர்களுக்கும் K படிவத்தில் உள்ள பெயர்களுக்கும் இடையில் வேறுபாடு இருப்பதால், அறிவிப்புகள் விநியோகிக்கப்படவில்லை. | K படிவம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1589/20 ஆம் இலக்க 2009 பெப்ரவரி 19 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் வாடிவீட்டு வாடகை நிலுவை ரூபா 2,229,222 தொகையும் அறவிடப்படமால் காணப்பட்டிருந்தது. | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 31 திசெம்பர் 2022 வரையுள்ள காலப்பகுதிக்காக செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைகள் ரூ 2,229,222 இனை செலுத்துமாறு கோரி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு தொடர்ச்சியாக கடிதம் மூலம் அறியத்தரப்பட்டிருந்தது. | வாடகை நிலுவை அறவிடப்படல் வேண்டும். |
| (ஐ) | சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 7,230,939 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வவுனியா குளம் சுற்றுலா மையமானது நபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் குத்தகைதார்ரினால் அதனை 06 வருடங்களிற்கு மேலாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்படாமல் காணப்பட்டிருந்து. | வழக்கின் தீர்ப்பு கிடைக்கப்பெற்றதும் தீர்ப்பின் அடிப்படையில் குறித்த சுற்றுலா மையத்தினை பாவனைக்கு வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படும். | சட்ட நடவடிக்கைகளை வெற்றி கண்டு நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெற்றுக் காணிகளுக்கான குத்தகை உடன்படிக்கையின் பிரிவு 04 இன் பிரகாரம் சபையின் முன் அனுமதியின்றி குத்தகைக்கு பெற்ற குறித்த காணிகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக் கட்டளைச் சட்டத்திற்கு முரணாக குத்தகைதாரரால் நிரந்தரக் கட்டடம் எதுவும் கட்ட முடியாது எனினும் மேற்படி உடன்படிக்கைக்கு முரணாக குத்தகைக்கு வழங்பட்ட 95 காணிகளில் குத்தகைக்கு பெற்றோரால் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன இது தொடர்பில் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 42A இற்கு அமைவாக எடுக்க வேண்டிய எதுவித நடவடிக்கைகளும் இற்றைநாள் வரை மாநகர சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபையால் வழங்கப்பட்ட 95 ஆதனங்களில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டுமானங்கள் தொடர்பாக, குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் ஊடாக நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடையறைகளுக்கான வாடகை உடன்படிக்கையின் பிரிவு 4 இன் பிரகாரம் சபையின் முன் அனுமதியின்றி வாடகைக்கு பெற்றோர் குறித்த கட்டிடத்தினை வேறு நபருக்கு உரிமை மாற்றம் செய்யவோ அல்லது உப-வாடகைக்கு வழங்கவோ முடியாது, இருந்தும் மேற்படி உடன்படிக்கைக்கு முரணாக சபைக்குச் சொந்தமான 128 கடைகள் வாடகைக்கு பெற்ரோரால் மூன்றாம் நபர்களுக்கு கைமாற்றப்பட்டுள்ளது. | · நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் தரவுகளை சமர்ப்பித்து தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. | -மேற்படி- |
| (இ) | சபைக்கு சொந்தமான வைரவப்புளியங்குளத்திலுள்ள 7 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட காணியொன்றினை தனிநபர் ஒருவரினால் தன்னிச்சையான முறையில் ஆக்கிரமித்து தொழில்நிலையம் நடாத்தி வருகின்ற போதிலும் அவ் நபருக்கெதிராக சட்ட நடவடிக்கைகளினை மேற்கொண்டு அதனை மீளப்பெற்றுக்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணியினை மாநகர சபைக்கு பாரதீனப்படுத்துவதற்கான கோரிக்கை கடிதம் பிரதேச செயலாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சொத்து கையகப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அத்துமீறிய கட்டுமானங்களை இனங்காணுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று இல்லாதிருந்ததுடன் மக்களின் முறைப்பாடுகளில் அடிப்படையில் மாத்திரம் அத்துமீறிய கட்டுமானங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவ்வாறே அத்துமீறிய கட்டுமானங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றும் சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, எதிர்வரும் காலங்களில் அத்துமீறிய கட்டுமானங்களை இனங்காண்பதற்குரிய பொருத்தமான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. | பதிவேடு பேணப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட 58 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கான இணக்கச் சான்றிதழ் சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டு தொடக்கம் குடிபுகு சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளாது வியாபார உரிமம் மற்றும் வியாபார வரியினை இரத்து செய்து குறித்த நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உரிய பரீசீலனையின் பின் இணக்கச் சான்றுதல் வழங்கப்படல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் இரண்டு உழவு இயந்திரங்கள், பதினொரு உழவு இயந்திர இளுவை பெட்டிகள், மூன்று டிப்பர் வாகனங்கள், நான்கு கலி பவுசர்கள், ஒரு பெக்கோ லோடர் மற்றும் ஒரு இரண்டு சக்கர உழவு இயந்திரம் என்பனவற்றை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்கள் தொடர்பில் மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் நடவடிக்கைகளின் | சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 சுற்றாடல் பிரச்சினைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் அதிகார வரம்புக்குள் சேகரிக்கப்படும் கழிவுகள் அனைத்தும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் | வவுனியா தெற்கு பிரதேசசபைக்கு சொந்தமான அவ்வளாகத்தினை சூழவும் வேலி அமைத்தல் என்பதும் | சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார வரம்பிற்குட்பட்ட பம்பைமடு பகுதியில் திறந்த வெளியில் கொட்டப்பட்டு எரியூட்டப்படுவதால் பிறிதொரு சபையின் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுக்க சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சாத்தியப்பாடற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. ஆயினும், இவ்விடயம் தொடர்பில், இங்கு கடமையாற்றும் காவலாளிகளுக்கு அறியத்தரப்பட்டு இவ்வாறான நடவடிக்கைகளை தடுக்கக்கூடியவாறான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சபையின் திண்மக்கழிவு செயற்பாடுகளில் ஈடுபடும் 43 சுகாதார ஊழியர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் மற்றும் காலுறைகளினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவ் ஊழியர்களுக்கு வருடாந்த மருத்துவ பரிசோதனைகளும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த பாதுகாப்பு அங்கிகளை கடமை நேரத்தின் போது பயன்படுத்துமாறு தொடர்ச்சியாக குறித்த ஊழியர்களுக்கு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. | மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |